# 7. ஆவணங்கள்

இன்றைய மனிதர் வாழ்வில் மட்டுமன்றி மொழி என ஒன்று உருவான நாள் முதலே "ஆவணம்" நடைமுறைக்கு வந்து விட்டது. இன்று எங்கு நோக்கிலும் ஆவணத்தின் ஆட்சியே! "ஆவணம்" என்பது யாது என்று அறியாத பள்ளிச் சிறுவர்கள் முதல் தொண்டுக் கிழவர்கள் வரையில் ஆவணங்களின் ஆட்சிக்கு உட்பட வேண்டியுள்ளது.

பள்ளி மாற்றுச் சான்றிதழ் - ஓர் ஆவணம்.
நன்னடத்தைச் சான்றிதழ் - ஓர் ஆவணம்.

சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், மருத்துவச் சான்றிதழ், மதிப்பெண் பட்டியல் - என அனைத்தும் ஆவணங்களே! உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்கள் முறைப்படி விசாரித்து வழங்கும் இந்த ஆவணங்களின் அடிப்படையில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மாணவர் இடம் பெறுகின்றனர். நிதியுதவி பெறுகின்றனர்.

பொது வாழ்க்கைக்கு உரிய நடைமுறைகளுக்கு உதவுபவை அனைத்தும் ஆவணங்களே!

வரிகள் கட்டியதற்கான பற்றுச்சீட்டும் ஆவணமே! பணவிடைத் தாள், காசோலை, வரைவோலை, ஏன்! கடிதங்கூட ஆவணமே! கடையில் ஒரு பொருளை விலைக்கு வாங்குகின்றோம். அதற்காகப் பெறுகின்ற பற்றுச் சீட்டும் ஆவணமே.

"நெல்லுவகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது" என்று பள்ளு இலக்கியம் பற்றிக் கூறுவது உண்டு. இதே போல் ஆவண வகைகளையும் கணக்கிட முடியாது. அரசாங்க

அலுவலகங்களின் கோப்புகள் அனைத்தும் ஆவணங்களாகும். மின் வாரியத்துக்கும் நுகர்வோருக்கும் இடையே உள்ள ஒப்பந்தமும் ஆவணம்; சம்பளப் பட்டியலும் ஆவணம். அரசு துறைகளுக்கிடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்தும் பொதுமக்களைப் பாதிக்கும் ஆவணங்களாகும். சட்டமன்ற நிகழ் குறிப்புகளும் ஆவணமே.

ஆயின் இவை தனி மனிதனை நேரடியாகப் பாதிக்காதவை. தனிமனிதர்களை நேரடியாகப் பாதிக்கின்ற ஆவணங்கள் பல உள்ளன.

1. விருப்பாவணம் (உயில்)
2. தானப் பத்திரம்
3. பாகப்பிரிவினைப் பத்திரம்
4. பரிவர்த்தனைப் பத்திரம்
5. விற்பனைப் பத்திரம்
6. அடமானப் பத்திரம்
7. கடன் உறுதிச் சீட்டு
8. உரிமக் கடிதம்
9. ஈரொட்டுக் கிரய ஆவணம்
10. செட்டில்மெண்ட பத்திரம்

11. "முகவர்" தகுதி தரும் பத்திரம்
12. பொது அதிகார ஆவணம்
13. காப்புறுதி ஆவணம்
14. விபத்துக் காப்பீட்டு ஆவணம்
15. நிர்வாகப் பத்திரம்
16. உறுதிமொழி ஆவணம் (Affidavit)
17. உடன்படிக்கை ஆவணம் (Agreement)
18. வேலை பழகுபவர் ஆவணம்
19. மாற்றுரிமை ஆவணம்
20. ஏல விற்பனை ஆவணம்

21. பிணை ஆவணம்
22. உண்டி
23. கடைச்சரக்கேற்று சீட்டு
24. இரத்துப் பத்திரம்
25. வைப்புச் சான்றிதழ்
26. இணைப் பிணைய ஆவணம்



27. கடன் தீர்வு உடன்பாடு ஆவணம்
28. இசைவு ஆவணம்
29. கடனுறுதிச் சீட்டு
30. ஒப்படைப்பு ஆவணம்

31. தத்து அதிகார ஆவணம்
32. திருமண விலக்கு ஆவணம்
33. கட்டுமுறி ஆவணம் (Indemnity Bond)
34. குத்தகை மாற்ற ஆவணம்
35. கூட்டாண்மை ஆவணம்
36. வாடகை ஒப்பந்த ஆவணம்
37. பிணைப் பத்திரம்
38. இணைப்புப் பத்திரம்
39. பொறுப்பு ஆவணம்

இவ்வாறு நூற்றுக்கணக்கான ஆவணங்கள் தனிமனிதன் ஒருவனுக்கும் மற்றொரு தனிமனிதனுக்கும் இடையே ஏற்படலாம். இவ்வகை ஆவணங்களால், வாழ்க்கையின் மேடுபள்ளங்களும் சிக்கல்களும் தீரலாம். அல்லது சிக்கல்கள் உண்டாக்கப்படலாம். மேற்குறித்த ஆவணங்கள் முறையாக அமைந்தால், சட்டவரம்புக்கு உட்பட்டு இருப்பின், ஆவணங்களின் பயன்கள், குறித்தவண்ணம் உரியவர்களை அடையும். ஆவணங்களின் பயன்கள், உரியவர்களுக்கு முழுமையாகக் கிடைக்க வேண்டுமானால் ஆவண வாசகங்கள் மிகத் தெளிவாக அமைய வேண்டும்.

## ஆவணங்களைப் பதிவு செய்தல்

தனிப்பட்ட இருவருக்கும் இடையே வீடு விற்பனை, மனை விற்பனை, அடைமானம், குடிக்கூலி ஒப்பந்தம், பாகப்பிரிவினை முதலிய செயல்கள் நடைபெறலாம். இருவருமே வாய்மைக்கு மறு உருவங்களாக இருக்கலாம். நேர்மைக்கு இலக்கணமாக அமையலாம், வாய்மொழி ஒப்பந்தங்களே போதும் என உடைமை மாற்றம் செய்து கொள்ளலாம். ஆயின் இந்நேர்மைப் பண்பும் காலங் காலமாக நீடிக்கும் என்று கொள்ள முடியுமா? வாய்மொழி ஒப்பந்தங்களை ஏற்காமல் மதிக்காமல் இகழ்ந்து இடைக்கண் முரிந்தார் பலர்!

இந்நேர்மையாளர்கள் செய்த ஒப்பந்தம், அவர்களுடைய காலத்திற்குப் பின்பு, அவர்தம் பிள்ளைகளையும் கட்டுப்படுத்தலாம். ஆயின் பிள்ளைகள் ஏற்க மறுக்கலாம். அதனால் வீண் வழக்குகள் தொடுக்கப் படலாம். இவ்வழக்குகள் தீரப் பல ஆண்டுகள் ஆகலாம்! இரண்டு மூன்று தலைமுறைகளும் நீடிக்கலாம். வழக்கும் வம்பும் ஒழிய வேண்டுமானால், ஒப்பந்தங்கள் எழுத்து வடிவில் அமைய வேண்டும்! மேலும் பதிவுத் துறையில் பதிவு செய்ய வேண்டும்.

ஆவணங்கள், முறையான வாசகங்களுடன், நடைமுறைக்கு ஏற்ற முறையில் பொருத்தமாக அமைந்து பதிவு செய்யப்பட்டால், வழக்குகள் ஏற்பட வாய்ப்பில்லை. அப்படியே ஏற்பட்டாலும் முதற் கட்டத்திலேயே தீர்ந்து விடும். சான்றாக ஒன்றைக் காண்போம்.

பெரிய புராணத்தில் குறிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி ஒன்று சுந்தர மூர்த்தி சுவாமிகளைப் பற்றிய வழக்கு.

சுந்தர மூர்த்தி - அப்போது திருநாவலூரான் எனப் பெயர் பெற்றவர். அவருடைய திருமணம் நடக்க இருந்தபோது, முது மறையவர் ஒருவர் திருமணப் பந்தலில் வம்பு செய்தார். தமக்கும் திருநாவலூரானுக்கும் இடையே வழக்கு ஒன்று உள்ளது என்றும் அது தீர்ந்த பின்பே திருமணம் நடக்க வேண்டும் என்றும் கூறினார். "என்ன வழக்கு!" என்ற போது, "மணமகன் தமக்கு அடிமை" என்றார். மணமகனின் பாட்டனார் எழுதித் தந்த ஆளோலையின்படியே பாட்டனும், அவன் வழிவந்தவரும் தமக்கு அடிமைகள்..வழிவழி அடிமைகள் என்றார். அதற்குச் சான்றாக ஓலை ஒன்றைக் காட்டினார். நாவலூரனின் பாட்டனார் எழுதித் தந்த ஆவணத்தின் படி ஓலை அது. "அந்தணருக்கு அந்தணர் அடிமையாவதா?" என்று மனங் கொதித்த நாவலூரர் அவ்வோலையைக் கிழித்தார். ஆயினும் வேதியன் இம்மியளவும் மனந் தளராது, "இது படியோலைதான்! மூல ஓலை, திருவெண்ணெய் நல்லூர் ஆவணக் களரியில் உள்ளது. அங்கே சென்று வழக்கு முடிக்கலாம்" என்றனர்.

திருவெண்ணெய் நல்லூரில் அவையோர் (அக்காலத்தில் ஊர்ப் பஞ்சாயத்து) முன்பு வழக்கு நடைபெற்றது. வழக்கிற்கு உரிய ஆவணமாகிய மூல ஓலை தருவிக்கப்பட்டது. ஆவணத்தை எழுதியவரின் கையொப்பம், சாட்சிகள் கையொப்பம், நாவலூராரின் பாட்டனாரின் கையொப்பம் ஆகியவை சரிபார்க்கப்பட்டு அனைத்தும் உண்மை என முடிவு செய்யப்பட்டது. அதன்படி நாவலூரார், முதிய



அந்தணரின் அடிமை என்று அவையோர் தீர்ப்பு வழங்கினர். இந்நிகழ்ச்கி பெரிய புராணத்தில் "தடுத்தாட் கொண்ட புராணத்தில்" மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## செப்பேடுகளும் கல்வெட்டுகளும்

தமிழக வரலாற்றைப் படித்தவர்கள், செப்பேடுகள் பற்றியும் கல்வெட்டுகள் பற்றியும் ஓரளவுக்குத் தெரிந்திருப்பர். வேள்விக் குடிச் செப்பேடுகள், தளவாய்புரச் செப்புகள், கூரம் செப்பேடுகள், சிவகாசிச் செப்பேடுகள், பார்வதிபுரச் செப்பேடுகள் முதலியவை சிறந்த ஆவணங்களுக்கு எடுத்துக்காட்டுகள்.

எடுத்துக்காட்டாகப் பள்ளன் கோயில் செப்பேடுகளைக் காண்போம்.

இவ்வேடுகள் கிடைத்த இடம், பள்ளன் கோயில் எனும் ஊராகும். (திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம்) 0.5 செ.மீ. கனமுடைய செப்பேடுகள் ஐந்து கொண்டவை. இவ்வைந்தையும் செப்பு வளையம் ஒன்று இணைக்கின்றது. செப்பு வளையத்தின் மீது சிம்மவர்மன் என்ற மன்னனின் முத்திரை உள்ளது. மூன்றாம் சிம்ம வர்மன் என்ற பல்லவனின் நன்கொடையை இவ்வேடுகள் உணர்த்துகின்றன. ஆவணங்கள் வரைவதற்குக் காகிதங்கள் இல்லாத காலம் அது. காலத்தால் அழியாத வண்ணம் கொடையினைச் செப்பேடுகளில் எழுதியளித்தான் பல்லவன்.

தன் ஆறாம் ஆட்சியாண்டில், இக்கொடையைத் தந்தான் அவன். வெண்குன்றக் கோட்டத்துப் பெரு நகர நாட்டுச் சபையாருக்கு ஆனது இக்கொடை. பெருநகர நாட்டைச் சேர்ந்த அமண் சேர்க்கை எனும் ஓரிடத்தைப் பருத்திக் குன்றில் வாழும் வஜ்ஜிர நந்திக் குரவருக்குப் பள்ளிச் சந்தமாகத் தந்தான் பல்லவன். தானமாக அளித்த நிலத்தைச் சுற்றியுள்ள எல்லைகள் யாவை என்பது செப்பேட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வெல்லைகளுக்கு உட்பட்ட இடத்தில் உள்ள நன்செய், புன்செய், களர், கன்றுமேய் பாழ்நிலம், காடு, கிடங்கு(குழி) கிணறு, குடியிருப்பு, தோட்டம், பள்ளம் ஆகிய அனைத்தும் உட்பட முழு உரிமையுடன், அரசு வரி நீக்கிப் பள்ளிச் சந்தமாகத் தந்துள்ளமை புலனாகின்றது.

"கோவும் பொறியும் மாற்றி குடிநீக்கி" என்ற தொடர், ஆவணம் எழுதும் முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அரசன் வாங்கும் வரி இனி இல்லை; ஏற்கனவே அந்நிலத்தை உழுது வருபவனுக்கு உரிமை இனி இல்லை; நிலத்திற்கு வழங்கிய பழைய பெயரும் இனி மாறும் என்பது கருத்து.

பிற்காலத்தில் எவரும் உரிமை கொண்டாட முடியாத வகையில், வரிவாங்க முடியாதபடி, இச்செப்பேடு அமைந்துள்ளது.

"கூரம் செப்பேடு" --பரமேசுவர மங்கலம் எனும் ஊரில் பரமேசுவர வர்மன் (கி. பி. 670-685) நிகழ்த்திய அறச் செயல்களை வகுத்துக் கூறுகின்றது.

"தளவாய்புரச் செப்பேடுகள்" - மிக அரியவை. பாண்டியன் கடுங்கோன் என்பான் அந்தணர் பன்னிருவர்க்குத் "திருமங்கலம்" எனும் ஊரைத் தானமாகத் தந்தான். பிற்காலத்தில் பாண்டிய நாட்டில் நடைபெற்ற கலகங்கள் காரணமாகச் செப்பேடுகள் தொலைந்து போயின. இவ்வாறே, "சோமாக்குறிச்சி" என்ற ஊரைப் பாண்டியன் ஒருவன் "காடக சோமாஜியர்" என்பவருக்குத் தானமாக அளித்தான். தானச் செப்பேடுகள், உள்நாட்டுக் கலகங் காரணமாகக் காணாமல் போய் விட்டன. தம் உரிமையைக் கொண்டாட அவர்களிடத்தில் ஆவணங்கள் இல்லா நிலையில், நில உரிமை பறிபோயிற்று. அவ்வூர் நிலங்களைக் "கடல் திருக்கைக் கிழவன்" என்பவன், தன் உடைமையாக்கிக் கொண்டான். தானம் பெற்ற அந்தணர்களின் சந்ததியினர் தம் உரிமைகளை இழந்து விட்டனர். இந்நிலையை அறிந்து, சோமாக்குறிச்சி என்ற ஊரின் தலைவனான நாராயணன் கேசவன் என்ற அரசியல் அதிகாரி, பாண்டிநாட்டு மன்னனான பராந்தகன் வீர நாராயணன் (கி. பி. 880-900) என்பானிடம் முறையிட்டான். அரசன் நடந்தவற்றை விசாரித்தான்.

அதன்படி, பாண்டியன் பராந்தகள் வீர நாராயணன், பழைய உரிமைகளை மீட்டு உரியவர்களுக்குத் தந்தான். வரி நீக்கினான். நான்கு எல்லைகளைக் குறித்தான். அரசியல் அலுவலர்களும், மத்தியஸ்தனும், கணக்கரும் ஆணையை நிறைவேற்றினர். நான்கு எல்லைகளுக்கும் எல்லைக் கல் நாட்டினார். இச்செயல்களைச் செப்பேடுகளில் விளக்கமாக எழுதினர். நிலப்பட்டா உரிமை என



இந்நாளில் வழங்குகின்ற முறையில் வரிப்புத்தகத்தில் அச்செய்தியைக் குறித்தனர்.

இவ்வாறு, செப்பேடுகள் பலவும் சிறந்த ஆவணங்களாக உள்ளன.

## கல்வெட்டுகள்

தமிழகக் கோயில்களில் காணலாகும் கல்வெட்டுகள் சிறந்த ஆவணங்களாகும். பெரும்பாலானவை தானம் காணிக்கை பற்றி எழுந்த ஆவணங்களாகும். எனினும் வேறு வகைச் செய்திகளையும் கல்வெட்டுகளில் காணலாம். நில விற்பனை, பரிவர்த்தனை, கோயில் - மடம் - குளம் நிறுவியமை - திருப்பணிகள் அமைத்தமை - ஆகியன பற்றியும் திட்டவட்டமான ஆவணங்களாகக் கல்வெட்டுகள் திகழ்கின்றன. ஓலையில் எழுதிய ஆவணங்கள் நின்று நிலைப்பதில்லை. மிக நீண்டகாலம் நீடிக்க வேண்டிய அறச் செயல்கள் நிலைத்த பயன் தர வேண்டும் என்பதற்காகக் கல்வெட்டுகளில் பதித்துப் பொதுவிடங்களில் நாட்டினர்.

கல்வெட்டுகளில் அக்கால மன்னர்கள் பற்றிய செய்திகள் பல உள்ளன. சில கல்வெட்டுகள் மிக அழகிய கவிதைகளாக வடிவெடுத்துள்ளன. கல்வெட்டாகிய ஆவணம் தோன்றிய காலத்தில் அவ்வந் நாட்டு மன்னன் பற்றிய செய்தி, முதலில் இடம் பெறும். இது, மெய்க்கீர்த்தி எனப்படும். ஒவ்வொரு மன்னனுக்கும் தனித்தனி மெய்க்கீர்த்தி உண்டு. அரசனுடைய புதுப்புதுச் சாதனைகள் அவ்வப்போது இடம் பெறும். மெய்க்கீர்த்தி முடிந்த பின்பு, ஆவணம் இடம் பெறும். மெய்க்கீர்த்தி என்பது வரலாற்று ஆராய்ச்சிக்கு உதவும். அடுத்து வருகின்ற ஆவணப் பகுதியோ ஒப்பந்தம் இன்னது என்பதை உணர்த்தும்.

"திருமகள் போலப் பெருநிலச்செல்வியும்" என்ற தொடக்கமுடைய மெய்க்கீர்த்தி, முதலாம் இராசேந்திர சோழனுக்கு உரியது.

"புகழ் மாது விளங்க, ஜெய மாது விரும்ப" என்பது முதற் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியின் தொடக்கமாகும். இவ்வாறு ஒவ்வொரு மன்னனுக்கும் தனித்தனி மெய்க்கீர்த்தியை வகுப்பர்.

கொங்கு சோழர் ஆட்சிக் காலத்தில் கல்வெட்டு ஒன்று, சிறந்த ஆவணமாகக் காட்சியளிக்கின்றது. சாதியுணர்வு மிக்க காலம் அது. சிற்சில சாதியினருக்குப் பொது உரிமைகள் மிகுதி! சிற்சிலருக்கோ உரிமைகள் குறைவு! பின்கண்ட கல்வெட்டைக் காண்க. கோவை மாவட்டம், பேரூர்க் கோயிலில் இக்கல்வெட்டு உள்ளது.

*"ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான், தென்கொங்கில் கம்மாளர்க்கு தங்களுக்கு பதினைந்தாவது ஆடிமாதம் முதல், நன்மை தின்மைக்கு இரட்டைச் சங்கும் ஊதி, பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்ளவும், தாங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்கு பாதரட்சை கோத்துக் கொள்ளவும் சொன்னோம். இப்படிக்கு நம் ஓலை பிடிபாடாகக் கொண்டு, சந்திராதித்த வரை செல்வதாக. தங்களுக்கு வேண்டும் இடங்களிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க. இவை விழுப்பாதராயந் எழுத்து. யாண்டு 15 நாள் 129, இவை கலிங்கராயந் எழுத்து. உ.*

முன்பு, கம்மாளருக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் சிலவற்றைக் கோனேரின்மை கொண்டான் என்ற சோழன் புதிதாக அளித்த உரிமைகள் பற்றிய ஆவணம் இது. நன்மை தீமைகளான திருமணம் அல்லது சாவுச் சடங்குகளின் போது கருவிகள் இசைக்கும் உரிமை இல்லை என்பதை மாற்றிய ஆவணம் இது. அச்சாதியினர் காலுக்குச் செருப்பணியும் உரிமை இல்லாமல் இருந்ததைப் போக்கியது. இவ்வுரிமைகளைக் கம்மாளர்கள் நுகருங்கால் யாரும் தடுக்கலாகாது என்பதற்காகவே "வேண்டும் இடங்களில் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க" எனவும் சலுகை கிடைத்தது.

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவலூரில் உள்ள திருவிக்கிரம பெருமாள் கோவிலில் உள்ள கல்வெட்டு ஒன்று, முதலாம் இராசேந்திரன் வழங்கியது ஆகும். "திருமன்னி வளர" என்ற தொடக்கத்துடன் உள்ள இக்கல்வெட்டு, அவ்வூர்ச் சபையார் விற்றுக் கொடுத்த நிலம் பற்றியதாகும். விற்ற நிலத்தின் நாற்புற எல்லைகள்- இத்தொகையைக் கொண்டு கோயிலில் செய்ய வேண்டிய பணிகள் - சடங்குகள், விழாக்கள் யாவை - என்று மிகத் தெளிவான விவரங்கள் உள்ளன.



செப்பேட்டில் உள்ள ஆவணங்கள், தனியார் வசம் இருக்க வேண்டியவையாகும். கல்வெட்டுகளோ, அனைவரும் அறிந்து பின்பற்றத்தக்க முறையில் கோயில் முதலிய பொதுவிடங்களில் அமையும். ஓலையில் எழுதி, பதிவு அலுவலக ஏடான வரிப்புத்தகத்தில் எழுதிய பின்பே பொதுமக்கள் காணும்படியாகச் செப்பேடும், கோயில்களில் கல்வெட்டும் உருவாகும்.

## எழுதியவர் பெறும் பரிசு

பழங்காலத்தில் செப்பேடுகளை எழுதியவருக்கும், கல்வெட்டில் பொறித்தவருக்கும் கணிசமான அன்பளிப்புகள் வழங்கினர். அரசனுடைய மெய்க்கீர்த்தியைப் புனைந்த அறிஞர்களையும், ஆவணங்ள் வரைந்த புலவர்களையும் மக்கள் நன்கு மதித்தனர். ஆவணங்கள் வரையுந் தொழிலில் அவர்கள் முழுமையாக ஈடுபட்டமையால் இவ்வன்பளிப்பு வழங்கினர் எனலாம். ஆவணம் வரைவது தனிக்கலை. படித்தவர்கள் அனைவருமே ஆவணம் எழுதிவிட முடியாது. தனிப்பயிற்சி வேண்டும். உலக நடை தெரிந்து, வம்பும் வழக்கும் சிக்கலும் இல்லா வகையில் சொற்களைத் தொடுத்து ஆவணங்களை வரைய வல்ல பெருமக்களை அக்காலத்தவர்கள் பெரிதும் மதித்தனர்; கணிசமான பொருள் அளித்தனர் என்பன கல்வெட்டுகள் மூலம் தெரியலாகின்றன.

தனவாய்ப்புரச் செப்பேடுகளில் வடமொழிச் சுலோகங்கள் 65 அடிகள் உள்ளன. புராந்தகனுடைய பெருமையைப் புனைந்து கூறும் மெய்க்கீர்த்தியை (பிரசஸ்தி) வரைந்தவன் ஸ்ரீமாதவன் சரண சேகரன் என்பான். பருத்தி வயக்கல் எனும் நிலங்களும், அந்நிலங்களில் உள்ள கிணறுகள் இரண்டும், கிணற்று நீரால் விளைகிற நிலங்களும் தானமாகத் தரப்பட்டன.

தமிழ்ப் பகுதியை எழுதியவனுக்கும், செப்பேட்டைப் பொறித்தவனுக்கும் "கண்ணங்கிரன் வயக்கல், சோமாசி வயக்கல் எனும் வயல்களும், இவற்றினுள் அமைந்துள்ள மூன்று கிணறுகளும், அக்கிணறுகளால் நீர் பெறும் வயல்களும்" தரப்பெற்றன. கிணறுகட்கு இடையே உள்ள நிலமும், மீன்பிடி உரிமையில் பாதியும் ஊரார் பங்காக இவர்களுக்குக் கிடைத்தன.

## ஆவணம் எழுதுங்கலை

ஆவணம் எழுதுவது பழங்கால முதலே நல்ல வருவாய்க்குரிய பணி - என்பது நன்கு புலனாகின்றது. தொன்று தொட்டு இதுநாள் வரையும் மதிப்பிற்குரிய பணியாக - முழுநேரத் தொழிலாகக் கொள்ளத் தக்க பணி இது என்பதில் ஐயமில்லை.

பட்ட வகுப்பிலும், முதுகலை வகுப்பிலும் தமிழ் பயின்ற இளைஞர்கள் மேற்கொள்ளத் தக்க பணிகளில் இதுவும் ஒன்று.

பொது மக்களின் வாழ்க்கைப் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்த வல்ல ஆவணங்களை அழகுற - முறைப்படி எழுதுந் தொழிலை வளமான வருவாய் தரத்தக்க தொழிலைத் தமிழ்ப்பட்டதாரிகள் துணிவுடனும் நம்பிக்கையுடனும் மேற்கொள்ள வேண்டும். இத்தொழிலைச் செய்வதற்கு உரிய பயிற்சிகளையும் தேர்வுகளையும் எதிர்கொள்ளவேண்டும்.

## இடைக்கால ஆவணங்களின் மொழி நடை

தமிழக வேந்தர்களின் ஆட்சி முடிவுற்றுச் சுல்தான்கள், நவாப்புகள், நாயக்க மன்னர்கள், மராட்டிய மன்னர்கள் முதலானோர் தமிழகத்தை ஆள முற்பட்ட பின்பு, ஆவணங்களில் இடம்பெறும் மொழிநடை, மிகவும் கலப்புடையதாக மாறி விட்டது. தமிழ்மொழிக்கு மாறான கலப்பு நடையில் உண்டான ஆவணங்கள் எளிய மக்களுக்குப் புரியவில்லை. தெலுங்கு, உருது, பாரசீகம், ஆங்கிலம், இந்தி, வடமொழி முதலிய மொழிகளில் உலவும் ஆவணம் பற்றிய சொற்களைத் தங்குதடையின்றி ஆவ்ணங்களில் கலக்கின்றனர். நாணமில்லாமல் கலக்கின்றனர். திருவள்ளுவர் ஆண்டு என்பது நடைமுறைக்கு வந்த பின்பு, பசலி (FASLI) என்ற நவாப் காலத்திய சொல்லாட்சி இன்னும் வேண்டுமா? "மாவட்டம்", "வட்டம்" என்ற சொற்கள் அறிமுகமாகி நன்கு பழகிய பின்பு, ஜில்லாவும் தாலுகாவும் ஆவணங்களில் இடம் பெற வேண்டுமா! "தஞ்சை டவுன், சிவராயர் தோட்டம் டோர் எண் 202" என்பதை எளிய தமிழில் "தஞ்சை நகர், சிவராயர் தோட்டம், கதவிலக்க எண்: 202" என எழுதினால் பிழையாகுமா? எளிய, இனிய தமிழ்நடையில் ஆவணங்கள் உருவாகவேண்டும்.



ஆவணங்கள் எழுதும்போது இயன்ற அளவில் எளிய தமிழைப் பயன்படுத்தும் போக்கை அரசும் வற்புறுத்துகின்றது. ஆயின் ஆவணம் எழுதுவோர் இன்னமும் கலப்பு நடையினையே மேற்கொண்டு வருகின்றனர். தமிழறிந்தவர்களான தமிழ்ப் பட்டதாரிகளே இனி ஆவணங்களை வரையலாம் என்று சட்டம் வழங்கினாலே இந்நிலை மாறும்!

## ஆவணம் எழுதும் முறை

ஆவணம் எழுதுவோர், உலக நடையறிதல் வேண்டும். சட்ட அறிவும் கொண்டிருத்தல் நன்று. ஆவண மொழி நடையே தனி! நன்னூலில் பயின்ற பத்து அழகு வகைகளும் இடம்பெற வேண்டிய இடம் இது. மிகையாகப் புனைந்து கூற வாய்ப்பு அறவே இல்லை. உள்ளதை உள்ளபடியே தெரிவிக்க வல்லதாக வாசகங்கள் இருத்தல் வேண்டும். இருபொருள் வருஞ் சொற்கள் கூடாது. இயற் சொற்களைக் கொண்டே எழுத வேண்டும். திரி சொற்களுக்கு இடமில்லை.

அடித்தல் - திருத்தலுக்கு மதிப்புக் குறைவு என்பதை உள்ளத்தில் கொண்டு, முதற்கண், திருந்தாப் படி (ROUGH COPY) ஒன்று எழுதிப் பலமுறை படித்துப்பார்த்தும், ஆவணத்தில் தொடர்புடையவர்களுக்குப் படித்துக்காட்டியும் உரிய திருத்தங்கள் அனைத்தையும் ஆவணத்தில் இழைக்க வேண்டும். மிகவும் பொறுமையுடன் செய்ய வேண்டிய பணி இது. பயன்படுத்தக்கூடிய சொற்கள் எதிர்காலச் சந்ததியினரைப் பாதிக்க வல்லவை என்பதை உள்ளத்தில் கொள்ள வேண்டும். சொற்களுக்கு இடையே இடைச் செருகலுக்கு வாய்ப்பு இல்லாத முறையில் ஒரே சீராக இடைவெளி இல்லாமல் எழுத வேண்டும். அதே போல் எண்களுக்கு இடையிலும் இடைச்செருகல் நேரா வண்ணம் ஒரே சீரான இடைவெளி விட்டு எழுத வேண்டும். ஆவணத் தாளில் உள்ள வரிகளுக்கு இடையே மிக ஒழுங்கான இடைவெளி விடல் வேண்டும். "இடைச்செருகல்" என்பது அடிக்கடி நேரக்கூடிய விபத்து! சதி! ஆவணம் எழுதுவோர் இதற்கு வாய்ப்புத் தரலாகாது. கருப்பு மையில் எழுத வேண்டும்.

ஆவணம் எழுதித் தருமாறு கேட்டவரின் முழு விருப்பத்தையும் நன்கறிந்து கொண்டு, அவர்களுடைய நன்மையை உள்ளத்தில் இறுத்தி எழுத வேண்டும். ஒருகால், அவர்களுடைய

கருத்தில் தெளிவு இல்லாமல் போனாலும், ஆவணம் எழுதுபவர் தெளிவை ஏற்படுத்த வேண்டும்.

ஆவணங்களுக்கு இரண்டு பேராவது சாட்சிக் கையொப்பம் இட வேண்டும். அவர்களுடைய முகவரியையும் ஆவணத்தில் குறிக்கவேண்டும். சாட்சியின் பெயரைப் போன்று ஒரே பெயருடைய பலர் ஓர் ஊரில் இருக்கலாம். எனவே, சாட்சிகளின் தந்தை, வீட்டு முகவரி, தெரு, வயது முதலிய முழு விவரங்களைப் பதிவு செய்து ஆவணத்தை நிறைவு செய்வது, ஆவண எழுத்தரின் பணி.

## தனித்துறை

ஆவணம் எழுதுவோர், தற்போது அரசு நடத்தும் தேர்வினில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது. காரணம், சட்டங்கள் பெருகி விட்டன. சட்ட நுட்பங்கள் பல்கி விட்டன. முத்திரைத் தாள் கட்டணங்கள் பல வகையாகி விட்டன.

ஆவணம் எழுதிய பின்பு, குறிப்பிட்ட காலத்துக்குள் பதிவு செய்தல் வேண்டும். நில விற்பனைப் பத்திரமாயின் இடம் பெற வேண்டிய தகவல்கள் பல உள்ளன.

(1) விற்பனைக்குரிய நிலத்தில் வேறு யாருக்கும் உரிமை இல்லை என்ற உறுதிமொழி.

(2) நிலத்தின் மீது அடைமானம் ஏதும் இல்லை என்ற உறுதி.

(3) நிலத்தின் மீது பொறுப்போ, நீதிமன்றத் தீர்ப்போ வேறுவகை வில்லங்கமோ ஏதும் இல்லை என்ற உறுதிமொழி.

(4) அப்படி ஏதும் ஏற்படின் தாமே தம் செலவில் வில்லங்கத்தை தீர்த்துத் தரும் உறுதிமொழி.

(5) வில்லங்கத்தினால் ஏற்படும் இழப்பு ஏற்பட்டால் அதை ஈடு செய்யும உறுதிமொழி முதலியவை இடம் பெற வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு வகை ஆவணத்திற்கும் உரிய கட்டாயமான தொடர்களும், செய்திகளும் மிகப்பலவாக உள்ளன. பயிற்சியினால் மட்டுமே வரக்கூடிய கலை, ஆவணம் எழுதுங் கலை. ஆயின் தாராளமான வருவாய் தரக்கூடிய பணி இது.



## வருவாய்

ஆவணம் எழுதுபவர்க்குக் கணிசமான வருவாய் உண்டு. விற்பனை, பரிமாற்றம், தானம், இறுதியாவணம், குத்தகை முதலிய மிகமிகச் சிறப்பான ஆவணங்களை முறைப்படியும் அழகாகவும் நயமாகவும் எழுதிப் பதிவுப்பணி முடிகிற வரை உடனிருந்து உதவுகின்ற வகையில் பணம் ஈட்ட வாய்ப்பு மிகுதி. நில, மனை, வீட்டு விற்பனைப் பத்திரம் என்றால் இருபுறத்தாருமே அன்பளிப்பு வழங்குவர்.

## மதிப்பு

ஆவணம் எழுதத் தெரிந்தால் மட்டும் போதுமா? இவ்வாறு ஆவணம் எழுத வல்லவராகப் பலர் ஒவ்வோர் ஊரிலும் இருப்பர். ஆயினும் சிற்சிலரையே பொதுமக்கள் பெரிதும் விரும்புவர். நம் ஊரில் சிறந்த வழக்கறிஞர், சிறந்த மருத்துவர் என்பார் யாவர்? மருத்துவ அறிவு மிக்கவர் - சட்ட அறிவு மிக்கவரே புகழ் பெறுவதில்லை. பொதுமக்களிடம் பழகும் இங்கிதம், சிவப்பு நாடா உள்ள அரசு அலுவலகங்களில் விரைந்து முடிக்கும் திறம், நாணயம், பொறுமை, செய்யும் பணியில் நேர்த்தி முதலியனவையே ஆவணம் எழுதுவோரை உயர்த்திடும் வெற்றிப் படிக்கட்டுகள்.

## ஆவணங்களில் நற்றமிழ்

ஆவணங்களில் நற்றமிழை, எளிய தமிழைப் பயன்படுத்திடவும் முனைய வேண்டும். பிறமொழிச் சொற்களை விலக்கி வைத்து, பழகிய -எளிய -பொருத்தமான -செறிவான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திட வேண்டும். அவ்வாறு அமைந்த ஆவணங்கள் சில வருமாறு:

### 1. கடன் உறுதிச் சீட்டு :

(புரோ நோட்டு, அன்டிமாண்டு நோட்டு)

1991-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 29 - ஆம் நாளன்று, தி.ச. மாவட்டம் ஆரணி வட்டம் ஒண்ணுபுரம் கிராமம், அரசு அலுவலர் திரு. இராமய்யா அவர்களின் மகன் திரு. இரா. பழநி அவர்களுக்கு மேற்படி மாவட்டம், மேற்படிவட்டம் சிங்காரத்தோப்புக் கிராமத்தைச்

சேர்ந்த திரு. கரியன் மகன் உழவு வேலை செய்யும் வரதப்பனாகிய நான் எழுதிக் கொடுத்த கடன் உறுதிச் சீட்டு என்னவென்றால், என் குடும்பத்தின் அவசரச் செலவிற்காக நான் தங்களிடமிருந்து ரொக்கமாகப் பெற்றுக் கொண்ட ரூபாய் 5000(ரூபாய்-ஐயாயிரம்) ஆகும். இத்தொகைக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ.100க்கு 1 %(ரூபாய் ஒன்று) வீதம் சேரும் வட்டியையும் அசலையும் நீங்கள் வேண்டும் போது தம்முடைய அசலைப் பெற்றவரிடத்திலே கொடுத்து விடுவேன். இந்தப்படிக்கு நான் இசைந்து எழுதிக் கொடுத்த கடன் உறுதிச்சீட்டு.

சாட்சிகள் :

கையொப்பம்

## 2. அடைமான ஆவணம்

1983--ஆம் ஆண்டு மேத்திங்கள் 24--ஆம் நாள் (இருபத்து நான்காம் நாள்) வ. ஆ. மாவட்டம் போளூர் வட்டம் கேட்டவரம் பாளையம் எனும் ஊரிலிருக்கும் முன்னாள் முப்படை வீரர் திரு. கண்ணப்பருக்கு,

மேற்படி மாவட்டம், மேற்படி வட்டம், புதூரில் பயிர்த்தொழில் செய்பவராகிய திரு. கோவிந்தன் மகன் முத்தழகு ஆகிய நான் எழுதிக் கொடுத்த அடைமானக் கடன் ஆவணம் என்னவென்றால், என் குடும்பத்தின் அவசர நிமித்தம் கீழ்க்கண்ட புன்செய் நிலங்களை ஈடுகாட்டி எங்கள் குடும்பச் செலவுக்காக நான் தங்களிடம் ரொக்கமாக பெற்றுக் கொண்ட ரூ.6000-00 (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) ஆகும். இத்தொகைக்கு திங்கள் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்று வீதம் சேரும் வட்டியை ஆண்டுதோறும் தவறாமல் செலுத்துவதுடன் முதல் தொகை (அசல்) யை தாங்கள் வேண்டும் போது தங்களிடம் செலுத்தி இந்த ஆவணத்தில் செல்லு வைத்து கடன் தீர்த்து அதன் பின்பு இவ்வாவணத்தைத் தங்களிடமிருந்து நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். இது நான் எழுதிக் கொடுத்த அடைமானக் கடன் பத்திரம்.

சாட்சிகள்

கையொப்பம்

1 ..............................

2. ..............................

சொத்து விவரம்



..............................................................................

..............................................................................

## தானமாக அளித்தல் ஆவணம்

(நிலவர ஏற்பாடு - செட்டில்மெண்ட்)

1986 ஆம. ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 24-ஆம் நாளன்று (இருபத்து நான்காம் நாள்) வ. ஆ. மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் கீழ்ப்பென்னாத்தூரில் வாழ்கின்ற வணிகர் சுப்பிரமணிய செட்டியார் மகன் பழநிக்குமரனுக்கு, மேற்படி மாவட்டம், மேற்படி வட்டம் ,ம.... சிப்பாடிக் கிராமத்தில் இருக்கும் வணிகர் பரசுராம செட்டியார் அவர்களின் மனைவியான தஞ்சம்மாள் ஆகிய நான் முழுமையான இசைவுடன் எழுதித்தந்த ஆவணம் என்னவென்றால், பழநிக்குமாரனாகிய நீ என்னுடைய பெயரன் (மூத்த மகள் நீலாவதியின் குமாரன்) ஆனதாலும், உன்மீது எனக்குள்ள அன்பினாலும் உனக்கு என்று சொத்து ஆதரவு செய்து வைக்க வேண்டுமென்ற நினைப்பாலும், எனக்கே முழு உரிமையானதாகவும் என் பெயரிலேயே நிலவுரிமையுடையதாகவும் நானே தீர்வை கட்டிவருவதாயும், நான் அனுபவித்து வருவதாகவும் உள்ள கீழ்க்கண்ட சொத்தை -ரூபாய்.28000-00 (ரூபாய் இருபத்தெட்டாயிரம்) மதிப்புள்ள சொத்தைத் தானமாக எழுதிக்கொடுக்கிறேன். இச்சொத்தை நீ இன்று முதல் உன் வசம் ஏற்றுக் கொண்டு, அரசுக்குச் செலுத்த வேண்டிய தீர்வைகளைச் செலுத்திக் கொண்டு முழு உரிமையுடன் சொத்தினை அனுபவித்து கொள்ளலாம். இன்றே நில உரிமையை (பட்டாவை) உன் பெயருக்கு மாற்றிக் கொள்ள, நில உரிமை விலகல் கடிதத்தையும் (பட்டா ராஜினாமா) இத்துடன் இணைத்துள்ளேன். இது நான் எழுதிக் கொடுத்த நிலவர ஏற்பாட்டு ஆவணம்.

சாட்சிகள்:

கையொப்பம்:

1.

2.

இவ்வாவணத்தை எழுதியவர்....................

சொத்து விவரம்:

..............................................................................

..............................................................................

## விற்பனை ஆவணம்

1992-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதிமூன்றாம் நாள் தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி வட்டம் பெரிய முத்தூரில் வேளாண்மைத் தொழில் நடத்தும் அண்ணாமலை என்பவரின் மூத்த மகன் சாமிநாதன் அவர்களுக்கு, மேற்படி மாவட்டம் மேற்படி வட்டம், மேற்குறித்த கிராமத்தில் பயிர்த்தொழில் செய்யும் கண்ணாயிரம் என்பவரின் இளைய மகன் கருணாகரன் ஆகிய நான் எழுதித் தந்த காலிமனை விற்பனைப் பத்திரம் யாதெனின், கீழ்க்கண்ட காலிமனையை நுமக்கு விற்பதென்று முடிவு செய்து அதற்குரிய விலை ரூ.5,000 (ரூ.ஐயாயிரம்) என்று முடிவு செய்து, அத்தொகையை நான் நும்மிடம் ரொக்கமாகப் பெற்றுக் கொண்டேன். விற்பனைக்குரிய இந்தக் காலிமனையை நீவீரே கைப்பற்றி நும்மிடம் வைத்து அனுபவித்து வர வேண்டியது. மேற்குறித்த சொத்தின் மீது எவ்வித வில்லங்கமும் இல்லை. அப்படி உண்டானால் நானே என் சொந்தச் செலவில் அதைத் தீர்த்துக் கொடுப்பேன். இந்தச் சொத்தினை நீரும், நும்முடைய வழித்தோன்றல்களும் எவ்விதமான தடையுமின்றி அனுபவித்துக் கொள்ளவும். இது நான் முழு இசைவுடன் எழுதித் தந்த காலிமனை விற்பனை ஆவணம்.

சாட்சிகள்:
கையொப்பம்

..............................

..............................

ஆவணம் எழுதியவர்..............................
சொத்து விவரம்: ..............................................................................

..............................................................................

### பயிற்சி

இது காறும் கண்ட மாதிரி ஆவணங்கள், மொழிக் கலப்பற்றவை. ஆயினும் நடைமுறையில் ஆவணங்களில் கலப்புநடை மிகுதி. ஆவணங்களின் முடிவில்,

"விளிமய விக்கிரயங்களுக்கு அருலுமாய் சர்வசுதந்திரமாய் அனுபவித்து வரவேண்டியது"

"உன் புத்திர பௌத்திர பாரம்பரியமாய் தானாதி- விளிமய விக்கிரையங்களுக்கு அருலுமாய் ஆண்டு அனுபவித்து வரவேண்டியது" என்ற தொடர்கள் இடம்பெறுவதுண்டு.



இன்னசாதி என்று ஆவணத்தில் குறிப்பிடுவது வழக்கம். இனியும் தேவையா? யார் யார் என நன்கு அடையாளம் காட்டும் வகையில் உள்ள தொடர்கள் சாலும்.

கலப்பு நடையில் ஆவணங்கள் இந்நாட்களிலும் எழுதப்படுகின்றன. இந்த நிலையைத் தமிழ் வல்லார் மாற்றிட வேண்டும். ஆவணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. கலப்பு நடையில் உருவான எளிய தமிழில் எழுதிடுக.

### பயிற்சி : 1

அழகிய தமிழ்நடையில் எழுதுக:

*அடமான மேடோவர்*

1983-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 19 வேலூர் தாலுக்கா சத்துவாச்சாரி கிராமத்திலிருக்கும் செங்குந்தர் ஜீவனம் A.P. கிருஷ்ணசாமி முதலியார் பாரியாள் அபுருபம்மாளுக்கு போளூர் தாலுக்கா கீழ்பட்டு கிராமத்திலிருக்கும் பிராமணர், பயிர் காலஞ்சென்ற சுப்பிரமணிய அய்யர் குமாரர் சாமிநாதன் எழுதிக் கொடுத்த அடமான மேடோவர் பத்திரம் என்னவென்றால் என் தகப்பனார் 20-3-1973-இல் புதூர் கிராமத்தில் சின்னசாமி ஆச்சாரி குமாரர் சுப்பிரமணிய ஆச்சாரியால் ரூபாய்.2000-க்கு அடமான பத்திரம் எழுதி களம்பூர் ரிஜிஸ்தர் ஆபிசில் 1 புத்தகம் 284வால்யூம் 1179-1180பக்கங்களில் 1969-ம் வருடாந்திய 860 நெம்பராக ரிஜிஸ்தர் ஆகியிருக்கும் பத்திரத்திற்கு நாளது தேதி வரையில் வட்டி பூராவும் செல்லானது போக அசல் பாக்கி ரூபா 2000-மும் இந்த ரூபா இரண்டாயிரமும் நாளது தேதியில் உம்மால் நான் ரொக்கம் பெற்று இந்த அடமான பத்திரத்தை உமக்கு மேடோவர் செய்திருக்கிறேன். நீர் அசல் பத்திரத்தில் கண்ட ஷரத்து படி யாரால் வசூல் செய்து

கொள்ளவும் அசல் பத்திரத்தை இத்துடன் உமக்குக் கொடுத்துள்ளேன். இந்தப் படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த அடமான மேடோவர் பத்திரம்.

சாட்சிகள் ..............................
கையெழுத்து ..............................
..............................

சொதது விவரம் ..............................

..............................................................................

பயிற்சி: 2 அழகிய தமிழ்நடையில் எழுதுக:
எதிரடிக் கிரையம்

ரூபாய் 2500-க்கு கிரையம் மறு கிரைய ஒப்பந்தத்துடன் 1991-ம் வருடம் ஏப்ரல் மாதம் ஒன்பதாம் தேதி வேலூர் தாலுக்கா கரடிகுடி கிராமத்தலிருக்கும் மாணிக்க உடையார் குமாரர் பயிர் ஞானப்பிரகாசம் அவர்களுக்கு ஷெ இருப்பிடம் சுப்பிரமணி கவுண்டர் குமாரர், பயிர் ஜீவனம், பரமசிவம் எழுதிக் கொடுத்த கிரையம் நான் என் குடும்ப செலவுக்காக இன்று தங்களிடம் ரொக்கமாகப் பெற்றுக் கொண்ட ரூபா.3000(மூவாயிரம்) கீழ்க்கண்ட சொத்தை தங்களுக்கு விக்கிரையித்து சொத்தையும் நான் இன்று தங்கள் சுவாதினம் செய்து விட்டபடியால் நீர் இது முதல் கீழ்க்கண்ட சொத்தை அனுபவித்து வர வேண்டியது. நான் இன்று முதல் வருகிற 8-4-1986 வரையில் வருடம் ஐந்துக்குள் நான் மேற்கண்ட கிரையத் தொகை ரூபா.2500-ஐ உமக்கு நான் செலுத்தி விட்டால் நீ பெற்றுக் கொண்டு கீழ்க்கண்ட சொத்தை எனக்கு மறு விக்கிரையம் செய்து கொடுக்கவேண்டியது. தாவறினால் 8-4-1986-க்கு பின் நீர் கீழ்க்கண்ட சொத்தை சர்வ சுதந்திர பாத்தியமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது. வாய்தாபடி நான் பணத்தை செலுத்தி நீர் மறு விக்கிரையம் செய்து கொடுக்க மறுத்தால் நான் சிவில் கோர்ட்டு மூலம் பணத்தை செலுத்தி தாவ தொடர்ந்து சொத்தை அடையும் பாத்தியம் எனக்கு உண்டு என்றும்இந்த கண்டிஷனில் உமக்கு இந்த விக்கிரையம் செய்திருக்கிறேன்.

சாட்சிகள்:
கையெழுத்து
..............................
..................................

விடுதலை பத்திரம் இதற்கு முன் நான் தங்களிடமிருந்து எவ்வித முன் பணமும் பெறவில்லை.
சாட்சிகள்:
கையெழுத்து
.............................
................................
சொத்து விவரம் ....................................................................
......................................................................



பயிற்சி : 3
அழகிய தமிழில் வரைக:
அக்ரிமெண்டு(காலி மனை)
ரூபாய் 19200-00-க்கு அக்ரிமெண்டு.

1992-ம் வருடம் ஆகஸ்ட மாதம் 12ந் தேதி போளூர் தாலுக்கா கண்ணமங்கலம் கிராமம் NO: 24 திருவள்ளுவர் தெருவில் வசிக்கும கருணீகர், உத்தியோகம், கந்தசாமிப் பிள்ளையின் மனைவி சாரதா ஷெ கிராமம் NO.44 வள்ளலார் தெருவில் வசிக்கும் செங்குந்தர் வர்த்தகம் ராஜி முதலியார் குமாரர் வேணு2. ஆக நாம் இருவரும் சம்மதித்து எழுதிக் கொண்ட அக்ரிமெண்டு என்னவென்றால் நம்மில் 2 இலக்கமிட்டவருக்கு பாத்தியப்பட்ட கீழ்க்கண்ட காலிமனையை நம்மில் 1 லக்கமிட்டவர் ரூ.19200..00க்கு பத்தொன்பதாயிரத்து இருநூறுக்கு கிரயம் வாங்குவதாக ஒப்புக்கொண்டு உள்வார். அதற்கு 2 லக்கமிட்டவர் சம்மந்தப்பட்டு இன்று தேதியில் 1 லக்கமிட்டவரிடமிருந்து அட்வான்சாகப் பெற்றுக் கொண்ட ரூ.2000.00 இரண்டாயிரம் மட்டும் மீதி பணத்தை இன்று தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் 1 லக்கமிட்டவர் 2 லக்கமிட்டவருக்கு செலுத்தி பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்து கொள்ள வேண்டியது. தவறினால் அட்வான்சு பெற்றத் தொகையுடன் இன்னும் 2000.00 சேர்த்து 1 லக்கமிட்டவருக்கு கொடுக்க வேண்டியது. இந்தப்படிக்கு நாம் இருவரும் சம்மதித்து எழுதிக் கொண்ட அக்ரிமெண்டு.

சாட்சிகள்
கையெழுத்து
.......................................
..........................................
சொத்து விவரம்
..........................................................................................
..........................................................................................

பயிற்சி : 4
அழகிய தமிழ்நடையில் எழுதுக:
உயில் சாசனம்

1977-ம் வருடம் ஏப்ரல் மாதம் 20-ஆம் தேதி போளூர் தாலுக்கா படவேடு மதுரா பெருமாள் பேட்டைக் கிராமத்தில் இருக்கும் வன்னியர் பயிர் வண்ணவராயன் மைனர் குமாரர்களான சுமார் 3 வயதுள்ள சிற்றரசு சுமார் 3 மாதக் குழந்தை நிலவழகன் ஆக இருவருக்கும் பையன்கள் மைனர்களாக இருப்பதால் மேற்படி மைனர்களுக்கு கார்டியனும் சவரட்சனை கர்த்தாவும் தகப்பனாருமான வேல் கவுண்டர் குமாரர் கண்ணனுக்கு மேற்படி தாலுக்கா

மேற்படி கிராமம் மேற்படி ஜாதி ஜீவனம் நாகநாத கவுண்டர் மைனர் குமாரர்களான சுமார் 5 வயதுள்ள சந்திரன்1 சுமார் 3 வயதுள்ள குமார்2 சுமார் 1 வயதுள்ள சின்ன பையன் 3 ஆகிய மூவருக்கும் மேற்படியாள்கள் மைனராக இருப்பதால் மேற்படி மைனர்களுக்குக் கார்டியனும் சவரட்சனை கர்த்தாவும் தகப்பனாருமான இரத்தினவேல் கவுண்டர் குமாரர் ஜெகன்னாதக் கவுண்டருக்கு மேற்படி தாலுக்கா மேற்படி கிராமம் மேற்படி ஜாதி மேற்படி ஜீவனம் நாராயண கவுண்டர் குமாரர் 85 வயதுள்ள வேல் கவுண்டர்1 சின்னம்மாள் 2 ஆகிய நாங்கள் இருவரும் ஏகோபித்து மனப்பூர்வமாகவும் பிறர் தூண்டுதலின்றும் நல்லெண்ணத்துடனும் சுய நினைவோடும் எழுதி வைத்த உயில் சாசனம் என்னவென்றால் நீங்கள் எங்கள் மகன்கள் வயிற்றுப் பேரன்கள் ஆனபடியாலும் உங்கள் பேரில் எனக்குள்ள (அ) எங்களுக்குள்ள அன்பினாலும் பிரியத்தினாலும் எங்களுக்கு வயது அதிகமாகி விட்டபடியாலும் நீண்ட நாட்கள் நாங்கள் உயிர் வாழ்வோம் என்ற நம்பிக்கை இல்லாததாலும் எங்களுக்குச் சொந்தமான அடியிற் கண்ட சொத்தை எங்கள் காலந்தரத்திற்குப் பிறகு நீங்கள் அடைவது குறித்து உங்களுக்கு உயில்சாசனம் செய்து வைத்திருக்கின்றோம். எங்கள் காலந்தரத்திற்குப் பிறகு அடியிற் கண்ட A ஷெட்யூல் சொத்தை கண்ணன் மைனர் குமாரர்கள் சிற்றரசு(1) நிலவழகன் (2) அடைய வேண்டியது. B ஷெட்யூல் சொத்தை நாகநாத கவுண்டர் மைனர் குமாரர்கள் சந்திரன்1. குமார் 2. சிற்றரசு 3. அடைய வேண்டியது. A.B. ஷெட்யூலில் கண்ட சொத்தை எங்கள் காலந்தரத்திற்குப் பிறகு மைனர்களுக்காக கண்ணனும் நாகநாத கவுண்டரும் அடைந்து கார்டியனாக இருந்து எந்தவிதமான பராதீனமும் செய்யாமல் மைனர்கள் மேஜரானபின் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டியது. இந்த உயிலில் கண்ட அம்சங்கள் யாவும் எங்கள் காலாந்தரத்திற்குப் பின் அமுலுக்கு வர வேண்டியது. இந்த உயிலை எங்கள் சுயதிசைக்குள் மாற்றவோ, ரத்து செய்யவோ, திருத்தவோ, புதுப்பிக்கவோ எங்களுக்குப் பூரண அதிகாரம் உண்டு. இந்தப்படிக்கு நாங்கள் சம்மதித்து எழுதி வைத்த உயில் சாசனம்.

சொத்து விவரம்

..........................................................................................

..........................................................................................

சாட்சிகள் : கையெழுத்து

....................................

....................................

மேற்கண்ட ஆவணங்களில் காணலாகும் கலப்பு நடையினைக் களைந்து எளிய நடையில் எழுதுக.



தொகுப்புரை

ஆவணம் எழுதுங் கலை, தமிழ் பயின்றவர்களுக்கு உகந்த கலை. ஆயினும் தனிப்பயிற்சி பெறவேண்டிய நுண்ணிய கலை. சமுதாயத்தில் செம்மாந்து நிற்க வைக்கும் துறை இது. முயன்றால் இமயத்தையும் தொடவல்ல துறையில் தமிழ் மாணவர்கள் தயங்காமல் ஈடுபட வேண்டும். பிழைப்புக்கான வழி ஒன்று என்பது கிடக்கட்டும். மொழியின் பயன்பாட்டை என்றென்றும் போற்றி வளர்க்க அரிய வாய்ப்பினை நல்குந் துறை என்பதால் தமிழ்ப் பற்றாளர்களுக்கு ஏற்ற துறை ஆவணத் துறை என்பதில் ஐயமில்லை.